# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2018. 06. 25 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை

**இலங்கையின் பெருந்தோட்டப் பிராந்தியத்தில் புதிய கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்குப் பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை எனவழைக்கப்படவேண்டியதும் அறியப்படுவதுமான அதிகாரசபையொன்றைத் தாபிப்பதற்காகவும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டமூலம்**

*மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சரால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 51.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை**

ச. வ- ஓ. 52/2016

**இலங்கையின் பெருந்தோட்டப் பிராந்தியத்தில் புதிய கிராமங்களை அபிவிருத்திசெய்வதற்குப் பெருந் தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை எனவழைக்கப்படவேண்டியதும் அறியப்படுவதுமான அதிகாரசபையொன்றைத் தாபிப்பதற்காகவும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக் காகவும் ஏற்பாடுசெய்வதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1**. இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் ……….. ஆம் இலக்க, பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறானது மான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

**பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபையைத் தாபித்தல்**

பெருந்தோட்டப் பிராந்தியத்துக் கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையைத் தாபித்தல்.

**2**. (1) (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "அதிகாரசபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பெருந்தோட்டப் பிராந்தியத் துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை என அறியப்படவேண்டியதுமான அதிகாரசபையொன்று தாபிக்கப் படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அப்பெயரில் அது வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

*அதிகாரசபையின் பெயர் குறிக்கப்பட்ட இடப் பரப்புக்கள்.*

**3**. வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் பெயர் குறிக்கப்பட்டதான தோதான அமைச்சர்களின் ஒருப்பாட்டுடன் அமைச்சினால் வெளிப்படுத்தப்பட்டவாறான பெருந்தோட்டப் பிராந்தியத்திலுள்ள இடப்பரப்புக்களினுள் இச்சட்டத்தின்கீழான அபிவிருத்திக் கருத்திட்டங்களைத் திட்டமிடுவதனையும் அமுலாக்குவதனையும் ஒருங்கிணைப்பதற்காக அதிகாரசபையானது பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

*அதிகாரசபையின் குறிக்கோள்கள்.*

**4**. அதிகாரசபையின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) பெருந்தோட்டப் பிராந்தியத்தில் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திமூலம் பெயர் குறிக்கப்பட்ட இடப்பரப்புக்களில் உள்ள பெருந்தோட்டச் சமுதாயத்தினரைச் சமூக நீரோட்டத்தினுள் சேர்ப்பதனை உறுதிப்படுத்துதல்; அத்துடன்

(ஆ) பெயர் குறிக்கப்பட்ட இடப்பரப்புக்களில் உள்ள பெருந்தோட்டச் சமுதாயத்தினர், தேசிய அபிவிருத்திச் செய்முறைக்குப் பங்களிப்பதனை இயலச் செய்யும் பொருட்டு சமூகரீதியிலும் பொருளாதாரரீதியிலும் அவர்களுக்குத் தத்துவமளித்தல்.

*அதிகாரசபையின் தத்துவங்கள்.*

**5**. அதிகாரசபை, அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பின்வரும் தத்துவங்களுள் எல்லாவற்றையும் அல்லது எவற்றையும் பிரயோகிக்கலாம்:-

(அ) அதிகாரசபை இச்சட்டத்தின்கீழான அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பயனுள்ள வகையில் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அதனை இயலச்செய்வதற்கு, ஓர் அரசாங்கத் திணைக்களம், உள்ளூரதிகாரசபை, ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது வேறேதேனும் தனியார் அல்லது பகிரங்க நிறுவனம் உள்ளடங்கலாக, எவரேனுமாளுடன் ஒப்பந்தங்களை அல்லது உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளலாம்;

(ஆ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள ஆட்களிடமிருந்து அல்லது ஆட்கள் குழுக்களிடமிருந்து காசாக அல்லது வேறுவகையாக மானியக்கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளலாம் என்பதுடன், இச்சட்டத்தின் கீழான அதன் பணிகளை நிறைவேற்றுவதிலும் அவற்றைப் பயன்படுத்தலாம்:

ஆயின், இச்சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அதிகாரசபையானது, எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(இ) அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக ஏதேனும் அரச வங்கியில் அல்லது அரச நிதி நிறுவனத்தில் நடப்பு, சேமிப்பு அல்லது வைப்புக் கணக்குகளைத் திறந்து பேணலாம்;

(ஈ) அதிகாரசபை தோதானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் அதிகாரசபையின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை அரச வங்கிகளிலும் அரச நிதி நிறுவனங்களிலும் முதலீடுசெய்யலாம்;

(உ) அதிகாரசபையின் நோக்கங்களுக்காக ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்து வைத்திருக்கலாம் அல்லது அதிகாரசபையினால் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் குத்தகைக்குக் கொடுக்கலாம், ஈடுவைக்கலாம், அடைமானம் வைக்கலாம், விற்கலாம் அல்லது வேறுவகையாகக் கையுதிர்க்கலாம்; அத்துடன்

(ஊ) பெயர்குறிக்கப்பட்ட இடப்பரப்புக்களுக்கு வெளியே ஏதேனும் அலுவலகத்தை, கிளை அலுவலகத்தை அல்லது களஞ்சியத்தைப் பேணலாம் மற்றும் இச்சட்டத்தின்கீழான பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் பணியை அத்தகைய பெயர்குறிக்கப்பட்ட இடப்பரப்புக்களுக்கு வெளியே நிறைவேற்றலாம்.

அதிகாரசபையின் பணிகள்.

**6**. அதிகாரசபையின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) அமைச்சரின் கலந்தாலோசனையுடன் பெயர்குறிக்கப்பட்ட இடப்பரப்புக்களில் புதிய கிராமங்களின் அபிவிருத்திக்காக அரசாங்கத்தின் திட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் அமுலாக்குதல்;

(ஆ) அதிகாரசபையின் குறிக்கோள்களை எய்துமுகமாகப் பணியாற்றுகையில் பெருந்தோட்டப் பிராந்தியத்திலுள்ள வேறு தேசிய, மாகாண மற்றும் மாவட்ட மட்ட அமுலாக்கல் முகவராண்மைகளுடன் ஒருங்கிணைதல்;

(இ) புதிய கிராமங்களின் அபிவிருத்திக்காக அரசாங்கத் திட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும கருத்திட்டங்களையும் பெயர்குறிக்கப்பட்ட இடப்பரப்புக்களில்

வகுத்தமைப்பதிலும் அமுலாக்குவதிலும் பெருந்தோட்டப் பிராந்தியத்திலுள்ள சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புக்களின் பங்குபற்றுகையை உறுதிப்படுத்துதல்;

(ஈ) பெயர்குறிக்கப்பட்ட இடப்பரப்புக்களினுள்ளான தோட்டங்களிலுள்ள வீடுகளின் சட்டப்படியான இருப்பாட்சியாளர்களுக்கு அத்தகைய வீடுகளின் சொத்தாண்மையை வழங்குவதற்காக அவர்களுக்கு உரித்துறுதிகள் வழங்கப்படுவதனை வசதிப்படுத்துதல்;

(உ) பெயர்குறிக்கப்பட்ட இடப்பரப்புக்களில் தோட்டத் துறையிலுள்ள இளைஞர்களுக்கு, அவர்களின் கல்வி அபிவிருத்திக்காக மூன்றாம்நிலை மற்றும் உயர்கல்வி நிறுவனங்களினுட் பிரவேசிப்பதற்கு உதவி வழங்குதல்;

(ஊ) பெயர்குறிக்கப்பட்ட இடப்பரப்புக்களிலுள்ள சமுதாயங்களுக்கு அத்தியாவசியச் சேவைகளை வழங்குவதனை வசதிப்படுத்துவதற்கு மாகாணசபை அமைச்சுக்களுடனும் அரசாங்க அமைச்சுக்களின் வேறு பிராந்திய மட்ட அலுவலகங்களுடனும் பணிபுரிதல்;

(எ) பெயர்குறிக்கப்பட்ட இடப்பரப்புக்களில் உள்ள தோட்டச் சமுதாயத்தினருக்கு மாற்று வாழ்வாதார வாய்ப்புக்களை மேம்படுத்துதலும் அதுதொடர்பில் அவசியமான வழிகாட்டுதலையும் உள்ளீடுகளையும் வழங்குதலும்;

(ஏ) பெண்கள், சிறுவர்கள், முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உட்பட, தோட்டத்துறையிலுள்ள வெவ்வேறு சமுதாயக்குழுக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு அவர்களுக்குத் தத்துவமளித்தல்;

(ஐ) தோட்டங்களிலுள்ள வீடுகளின் சட்டப்படியான இருப்பாட்சியாளர்களின் வழிவந்தோருக்கு, பெயர்குறிக்கப்பட்ட இடப்பரப்புக்களிலுள்ள தோட்டங்களில்

அத்தகைய சட்டப்படியான இருப்பாட்சியாளர்களினால் துய்க்கப்படுகின்ற எல்லா வசதிகளும் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துதல்;

(ஒ) காணி மற்றும் நீர் வளங்களின் பௌதீகப் படியிறக்கத்தை மிகக்குறைந்ததாக்குவதனையும் சூழற்சார் தீழ்ப்பை ஒழிப்பதனையும் இலக்காகக் கொண்டுள்ள தடுப்புச்சார் மற்றும் பரிகாரம்சார் மட்டங்களைக் கொண்ட எல்லா மட்டங்களிலும் பேணிக்காப்பு வழிமுறைகளைப் பலப்படுத்துதல்;

(ஓ) தேசியக் கட்டிட ஆராய்ச்சி ஒழுங்கமைப்பினதும் தேசியப் பேரழிவு செயலாட்சி நிலையத்தினதும் கலந்தாலோசனையுடன் பெயர்குறிக்கப்பட்ட இடப்பரப்புக்களில் அபாயகரமான இடங்களை அடையாளங்காணுதலும், அவற்றை மாற்றுப் பயனீட்டுப் பாவனைக்காக மாற்றுதலும்; அதன்மூலம், வதிவிட நோக்கங்களுக்காக அவற்றைச் சட்டவிரோதமான இருப்பாட்சிக்கெதிராகப் பாதுகாக்கமுடியும்; அத்துடன்

(ஔ) பெயர்குறிக்கப்பட்ட இடப்பரப்புக்களில் போதிய சமூக சேவைகளும் போதிய நிலைபெறுதகு உட்கட்டமைப்பு வசதிகளும் வழங்கப்படுவதனை ஊக்குவித்தல்.

## பாகம் II

### அதிகாரசபையின் முகாமையும் நிருவாகமும்

*அதிகார சபையின் முகாமைச்சபை.*

**7**. (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பின்வருவோரைக் கொண்டதுமானவொரு முகாமைச் சபையினால் அதிகாரசபையின் அலுவல்கள் முகாமைசெய்யப்படுதலும் நிருவகிக்கப்படுதலும் வேண்டும்:-

(அ) ஏழு பதவிவழி உறுப்பினர்கள்; அதாவது -

(i) மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சைச் சேர்ந்தவரும், அத்தகைய அமைச்சுக்கான செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவருமான அலுவலரொருவர்;

(ii) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சுக்கான செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவருமான அலுவலரொருவர்;

(iii) பெருந்தோட்டத் தொழில்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சுக்கான செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான அலுவலரொருவர்;

(iv) பகிரங்கத் தொழில்முயற்சி அபிவிருத்தி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சுக்கான செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவருமான அலுவலரொருவர்;

(v) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சுக்கான செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவருமான அலுவலரொருவர்;

(vi) வீடமைப்பு மற்றும் நிர்மாணம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சுக்கான செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப் பட்டவருமான அலுவலரொருவர்;

(vii) காணி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சைச் சேர்ந்தவரும் அத்தகைய அமைச்சுக்கான செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான அலு வலரொருவர்;

(ஆ) உட்கட்டமைப்பு அபிவிருத்தி, சமுதாய அபிவிருத்தி, நிதி மற்றும் மாகாண நிருவாகம் என்ற துறைகளில் நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள ஆட்களிடையே யிருந்து (இதனகத்துப் பின்னர் ''நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்'' எனக் குறிப்பீடுசெய்யப்படுபவர்களும்) அமைச்சரினால் நியமிக்கப்படவேண்டியவர்களுமான ஆறு உறுப்பினர்கள். இவ்வுறுப்பினர்களுள் ஒருவர் பெருந்தோட்டக் கம்பெனிகளை பிரதிநிதித்துவம் செய்யும் இலங்கைப் பெருந்தோட்ட உரிமையாளர்கள் சங்கத்திலிருந்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

சபையின் தவிசாளர் மற்றும் துணைத் தவிசாளர்.

**8.** (1) அமைச்சர், நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிலிருந்து–

(அ) சபையின் தவிசாளராகவிருப்பதற்கு ஓர் உறுப்பினரை யும்; அத்துடன்

(ஆ) சபையின் துணைத்தவிசாளராகவிருப்பதற்கு ஓர் உறுப் பினரையும்,

நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளரும் துணைத்தவிசாளரும் மூன்றாண்டு காலப் பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடைய வராதலும் வேண்டும்.

(3) தவிசாளரும் துணைத்தவிசாளரும், அமைச்சரின் அங்கீகாரமின்றி, தமது பதவிக்குரிய கடமைகளுக்கப்பால் சம்பளம்பெறும் ஏதேனும் தொழிலில் ஈடுபடுதலாகாது.

(4) தவிசாளர் அல்லது துணைத்தவிசாளர், எந்நேரத்திலும், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன், அத்தகைய விலகுகை, அது எத்தேதியன்று அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அத்தேதியன்று பயனுறுதலும் வேண்டும்.

(5) அமைச்சர், குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக தவிசாளரை அல்லது துணைத்தவிசாளரை அவர்களின் அந்தந்தப் பதவிகளிலிருந்து அகற்றலாம்.

(6) சுகவீனம், வேறு உடற்றகுதியீனம், இலங்கையில் இல்லாமை என்ற காரணங்களுக்காக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தவிசாளர் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவுள்ளவிடத்து, அமைச்சர், தவிசாளராகச் செயலாற்றுவதற்குத் துணைத் தவிசாளரை நியமிக்கலாம்.

(7) தவிசாளர் மற்றும் துணைத்தவிசாளர் ஆகிய இருவரும், சுகவீனம் காரணமாக, வேறு உடற்றகுதியீனம் காரணமாக இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தமது பதவிகளுக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவர்களாகவுள்ளவிடத்து, அமைச்சர், நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரென்றமுறையில் அத்தகைய உறுப்பினரின் வழமையான கடமைகளுடன் சேர்த்து மேலதிகமாகத் தவிசாளராகச் செயலாற்றுவதற்கு வேறெவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரை நியமிக்கலாம்.

(8) தவிசாளரின் அல்லது துணைத்தவிசாளரின் பதவி, அப்பதவியை வகிப்பவர் இறப்பதன்மேல், பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மேல் அல்லது பதவியிலிருந்து விலகுவதன் மேல் வறிதாகவருமிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழான நியமன

மொன்று செய்யப்படும்வரை, அத்தகைய பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு அமைச்சர் சபையின் உறுப்பினரொருவரை நியமிக்கலாம்.

*சபை உறுப்பினர்களின் நிதிசார் அக்கறை.*

**9.** (1) அமைச்சர், சபையின் உறுப்பினராக ஆளொருவரை நியமிக்குமுன்னர், சபையின் உறுப்பினரொருவராக அவரது பணிகளை நிறைவேற்றுவதனைப் பங்கமானமுறையில் பாதிக்கக் கூடியவாறாக, அதிகாரசபையின் அலுவல்களில் அத்தகைய ஆளுக்கு நிதிசார் அல்லது வேறு அக்கறையெதுவும் இல்லையென தம்மை திருப்திப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(2) சபையின் உறுப்பினரெவரும் நியமிக்கப்பட்டதிலிருந்து அத்தகைய ஏதேனும் அக்கறையைக் கொண்டிருக்கவில்லையென அமைச்சர் காலத்துக்குக்காலம் தம்மை திருப்திப்படுத்திக் கொள்ளுதலும் வேண்டும்.

(3) அதிகாரசபையினால் செய்துகொள்ளப்பட்ட அல்லது செய்துகொள்ளப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ அக்கறைகொண்டுள்ளவரான சபையின் உறுப்பினரொருவர் தமது அக்கறையின் தன்மையை சபையின் கூட்டமொன்றில் வெளிவிடுதல் வேண்டும் அத்துடன் அத்தகைய வெளிவிடுகை அதிகாரசபையின் நிகழ்ச்சிக்குறிப்புக்களில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறுப்பினர் அந்த ஒப்பந்தம் தொடர்பாக அதிகாரசபையின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிபில் பங்குபற்றுதலுமாகாது.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, சபையின் உறுப்பினர் என்பது, தவிசாளரையும், துணைத்தவிசாளரையும், பதவிவழி உறுப்பினரொருவரையும், நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரையும் உள்ளடக்கும்.

*சபையின் உறுப்பினராக விருப்பதற்கான தகைமையீனங்கள்.*

**10.** ஆளொருவர் பின்வருமாறிருப்பின், அத்தகைய ஆள் சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்:-

(அ) அவர், பாராளுமன்றத்தின், ஏதேனும் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) அவர், இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருந்தால் அல்லது இல்லாதொழிந்தால்;

(இ) அவர், அதிகாரசபையினால் அல்லது அதன்சார்பில் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ வைத்திருந்தால் அல்லது துய்த்தால்;

(ஈ) அத்தகைய ஆள் சபையின் உறுப்பினரொருவராகத் தமது பணிகளை நிறைவேற்றுவதனைப் பங்கமான முறையில் பாதிக்கக்கூடியவாறான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால்;

(உ) அவர், வருகைதராதிருப்பதற்காகச் சபையின் முன்னங்கீகாரத்தைப் பெறாமல், சபையின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகைதராதிருந்தால்;

(ஊ) அவர், இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீன மற்றவராகக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால்;

(எ) அவர், இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்கவகையற்றவர் அல்லது வங்கிமுறிந்தவர் என வெளிப்படுத்தப்பட்டிருந்து, பொறுப்புவிடுவிக்கப்படாத கடனிறுக்கவகையற்றவரான அல்லது வங்கி முறிந்தவரான ஆளொருவராகவிருந்தால்; அல்லது

(ஏ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத்தீர்ப்பை அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்.

*நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தொடர்பான ஏற்பாடுகள்.*

**11.** (1) சபையின் நியமிக்கப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும், இறப்பின்மூலம், பதவிவிலகுவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, மூன்றாண்டு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன், ஒழுக்காற்று ஏதுக்களின் மீது பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(2) அமைச்சர், குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், அதற்கென அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாமென்பதுடன், அத்தகைய விலகுகையானது, அமைச்சரினால் அது ஏற்றுக் கொள்ளப்படுவதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

(4) (அ) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் இறக்கும், பதவிவிலகும் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படும் பட்சத்தில், அமைச்சர், அக்குறிப்பிட்ட நியமிக்கப்பட்ட உறுப்பினரின் நியமனம் தொடர்பாக இச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு, அவரினிடத்திற் செயலாற்றுவதற்கு வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(ஆ) அமைச்சர், பந்தி (அ) வின் நோக்கங்களுக்காக, வெற்றிடம் ஏற்பட்டதிலிருந்து ஒருமாதத்தினுள் உறுப்பினரொருவரை நியமித்தல் வேண்டும்.

(இ) பந்தி (அ) வின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(5) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவுள்ளவிடத்து, அமைச்சர், பிரிவு 7 (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவரினிடத்திற் செயலாற்றுவதற்கு வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(6) முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, நியமிக்கப்பட்டவோர் உறுப்பினர், அவர் மீளநியமிக்கப்படும்வரை அல்லது அவரினிடத்தில் அமைச்சரினால் புதிய உறுப்பினரொருவர் நியமிக்கப்படும்வரை, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட மூன்றாண்டு காலப்பகுதி கழிந்தபின்னர் தொடர்ந்து பதவி வகிக்கலாம்.

சபையின் கூட்டங்கள்.

**12.** (1) தவிசாளர்,சமுகமாயிருப்பின் சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமைதாங்குதல் வேண்டும். தவிசாளர் வருகைதராதவிடத்து துணைத்தவிசாளர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும். தவிசாளர் மற்றும் துணைத் தவிசாளர் ஆகிய இருவரும் ஏதேனும் கூட்டத்திற்கு வருகை தராதவிடத்து, சமுகமளித்துள்ள உறுப்பினர்கள் அக்கூட்டத்துக்கான தவிசாளரொருவரைத் தம்முள்ளிருந்து தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) சபையினால் முடிபுக்கான எல்லாக் கருமங்களும் சபையின் கூட்டமொன்றில் கையாளப்படுதல் வேண்டுமென்பதுடன், சமுகமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரினால் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஒரு கூட்டத்தில் கவனத்துட்கொள்ளப்பட்ட ஏதேனும் விடயத்தின் மீது வாக்குகள் சமமாகவிருக்கும் பட்சத்தில், அக்கூட்டத்தின் தவிசாளர் அவரது மூலவாக்குடன்சேர்த்து மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) சபையின் எல்லா முடிபுகளும் காரணங்களினால் ஆதாரப்படுத்தப்படுதலும், எழுத்திலிருத்தலும் வேண்டுமென்பதுடன், அதிகாரசபையின் இலச்சினை அதில் பொறிக்கப்படுதலும் வேண்டும்.

(5) சபையின் எவரேனும் உறுப்பினர், எழுத்திலான அறிவித்தல்மூலம், கூட்டமொன்றை அழைக்கும்படி தவிசாளரைக் கோரலாமென்பதுடன், தவிசாளர், நியாயப்படுத்தத்தக்க காரணங்களுக்காகவன்றி வேறுவகையாக அவ்வாறு செய்வதற்கு மறுத்தலுமாகாது.

(6) பதினாறாம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் அழைத்தல் வேண்டும்.

(7) சபையின் செயல், முடிபு அல்லது நடவடிக்கை எதுவும், சபையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்ற தாக்கப்பட்டதாகக் கருதப்படுதலாகாது.

(8) சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(9) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, சபையின் கூட்டங்களும் அத்தகைய கூட்டத்தில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கை முறையைச் சபையானது ஒழுங்குபடுத்தலாம்.

**அதிகாரசபையின் இலச்சினை.**

**13.** (1) அதிகாரசபையின் இலச்சினை சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் இலச்சினை –

(அ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்;

(ஆ) சபை தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆளின் அல்லது ஆட்களின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்;

(இ) சபையின் வலுவளிப்பின்றியும் சபையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றியும் ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் இருவரும் தாம் சமூகமாயிருந்தனர் என்பதற்கத்தாட்சியாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் இலச்சினை எந்த ஆவணங்களில் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்த ஆவணங்கள் பற்றிய இடாப்பொன்றைச் சபையானது பேணுதல் வேண்டும்.

*சபையானது கூட்டங்களுக்கு நிபுணர்களை வரவழைத்தல்.*

**14.** (அ) சபையானது, சபையின் பணிகளைப் பயனுள்ள வகையில் நிறைவேற்றுவதற்காக இயைபான விடயப்பொருள் தொடர்பில் நிபுணர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காகச் சபையின் கூட்டமொன்றுக்கு அத்தகைய விடயப்பொருள் தொடர்பில் அவர்களை வரவழைக்கலாம்.

(ஆ) நிபுணர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்வதற்கான அல்லது நிராகரிப்பதற்கான தனி தற்றுணிபைச் சபையானது கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) நிபுணர்கள் வாக்களிப்பதற்கான உரிமைகள் எவற்றையும் கொண்டிருத்தலாகாது.

*சபையின் கூட்டங்களுக்கு வருகை தருவதற்கான ஊதியம்.*

**15.** சபையின் உறுப்பினர்களுக்கும் நிபுணர்களுக்கும் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக, சபையின் கூட்டங்களுக்கு வருகைதருவதற்கான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

## பாகம் III

### அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியையும் பணியாட்டொகுதியினரையும் நியமித்தல்

*அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதி.*

**16.** (1) அமைச்சர், சபையின் விதப்புரையின்மீது, (இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப் படும்) பணிப்பாளர் தலைமையதிபதியொருவரை அதிகாரசபை யின் பணியாட்டொகுதிக்கு நியமித்தல் வேண்டும்; அவரே அதிகாரசபையின் பிரதான நிறைவேற்றலுவலராகவிருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கும் மேற்பார்வைக்கும் அமைய,-

(அ) பணியாட்டொகுதியினரின் நிருவாகமும் கட்டுப்பாடும் உட்பட, அதிகாரசபையின் அலுவல்களின் நிருவாகம் பொறுப்பிக்கப்பட்டவராதல் வேண்டும்;

(ஆ) சபையின் எல்லா முடிபுகளையும் நிறைவேற்றுவதற் காகப் பொறுப்பாதல் வேண்டும்;

(இ) சபையினால் அவருக்குக் குறித்தளிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய எல்லாப் பணிகளையும் நிறை வேற்றுதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) சபையின் செயலாளராகவும் அதிகாரசபையின் பிரதான கணக்கீட்டலுவலராகவும் பணியாற்றுதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் எவையேனும் கூட்டங்களில் சமுகமளிப்பதற்கும் உரையாற்றுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும், ஆனால் அத்தகைய கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் எழுத்திலான அங்கீகாரத்துடன், அவ்வாறு செய்வது அவசியமென அவர் கருதும்போதெல்லாம், அவரது தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளுள் எவற்றையும் அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்கு எழுத்தில் கையளிக்கலாம் என்பதுடன், அத்தகைய அலுவலர் அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியை, பணிப்பாளர் தலைமையதிபதியின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புக்கமைய பிரயோகித்தலும், புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் வேண்டும்.

(5) அமைச்சர், பின்வரும் சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் தலைமையதிபதியைப் பதவியிலிருந்து அகற்றலாம்:-

(அ) தமது கடமைகளைப் புரிவதற்கு நிரந்தரமாக இயலாதவராக வந்தால்; அல்லது

(ஆ) அமைச்சரின் அபிப்பிராயத்தில், மோசடியானதாகவுள்ள அல்லது சட்டவிரோதமான தன்மையினதாகவுள்ள அல்லது அதிகாரசபையின் நலன்களுக்குப் பங்கமானதாகவுள்ள ஏதேனும் செயலை அவர் செய்திருந்தால்;

(இ) அதிகாரசபையினால் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புகளுக்கு அவர் இணங்கியொழுகத் தவறியிருந்தால்.

(6) பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவிக்காலம், நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுகளாதல் வேண்டுமென்பதுடன், அவர் (5) ஆம் உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(7) பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவி, அப்பதவியை வகிப்பவர் இறப்பதன்மீது, (5) ஆம் உட்பிரிவின்கீழ் அவர் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மீது அல்லது அமைச்சருக்கு அதற்கென முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் அவர் பதவிவிலகுவதன்மீது வறிதாதல் வேண்டும்.

(8) பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படின், (1) ஆம் உட்பிரிவின்கீழான நியமன மொன்று செய்யப்படும்வரை பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமைகளைப் புரிவதற்கு அமைச்சர் சபையின் உறுப்பின ரொருவரை நியமிக்கலாம்.

அதிகார சபையின் பணியாட் டொகுதியினர்.

**17.** (1) அதிகாரசபை, அதன் பணிகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் ஊழியர்களையும் அதிகாரசபையின் பணியாட்டொகுதியினராக நியமிக்கலாம்.

(2) அதிகாரசபை, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபைக்கு நியமிக்கப்பட்ட அலுவலர்களும் ஊழியர்களும் தொடர்பில்-

(அ) அத்தகைய அலுவலர்களினதும் ஊழியர்களினதும் தொழில் நியதிநிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம்;

(ஆ) அரசாங்கத்தின் தொடர்புபட்ட வழிகாட்டுநெறிகளுக்கு இணங்க அத்தகைய அலுவலர்களுக்கும் ஊழியர் களுக்கும் எந்த வீதங்களில் ஊதியமளிக்கப்பட வேண்டுமோ அந்த வீதங்களை நிர்ணயிக்கலாம்;

(இ) அத்தகைய அலுவலர்களின்மீதும் ஊழியர்களின்மீதும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம் அல்லது அத்தகைய அலுவலர்களையும் ஊழியர்களை யும் பதவியிலிருந்து நீக்கலாம்; அத்துடன்

(ஈ) அத்தகைய அலுவலர்களினதும் ஊழியர்களினதும் நன்மைக்காகப் பணியாட்டொகுதி சேமநல மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைத் தாபிக்கலாமென்ப துடன், அத்தகைய எவையேனும் திட்டங்களுக்கு உதவு தொகையும் செலுத்தலாம்.

(3) சபையானது, (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்.

(4) அதிகாரசபை, எவ்வாறாயினும், பகிரங்க அல்லது தனியார் துறையில் எவரேனுமாளினால் வகிக்கப்பட்ட முன்னைய ஏதேனும் பதவியிலிருந்து பதவிநீக்கப்பட்டுள்ள அத்தகைய ஆளை அதிகாரசபையின் அலுவலர் அல்லது ஊழியர் ஒருவராக நியமித்தலாகாது.

பகிரங்க அலுவலர்கள், அதிகார சபையின் பணியாட் டொகுதிக்கு நியமிக்கப் படுதல்.

**18.** (1) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் அவ்வலுவலர் எந்த அமைச்சின்கீழ் தொழிலுக்கமர்த்தப் பட்டுள்ளாரோ அந்த அமைச்சுக்கான செயலாளரினதும், பொது நிருவாகம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகார சபையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகார சபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) எவரேனுமாள் எந்த ஒப்பந்தத்தின்மூலம் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டுள்ளாரோ அந்த ஒப்பந்தத்தை அரசாங்

கத்துடன் செய்து கொண்டுள்ள அவ்வாளை அதிகாரசபை தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் அதிகாரசபையுடனான ஏதேனும் சேவைக் காலப்பகுதி, அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் அலுவலர் களையும் ஊழியர்களையும் அதிகார சபையின் பணியாட் டொகுதிக்கு நியமித்தல்.

**19.** (1) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது வேறு ஊழியர், அத்தகைய அலுவலரின் அல்லது ஊழியரின் மற்றும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையின் சம்மதத்துடன், அதிகார சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதிகாரசபையினாலும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக் கூடியவாறு, ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவை உட்பட அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது அதேபோன்ற சம்மதத்துடன் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) எவரேனுமாள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படுமிடத்து, அதிகாரசபையின் பணியாட்டொகுதியின் வேறெவரேனும் உறுப்பினரைப்போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அவர் அமைந்தவராதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் தொடர்பாக "ஆளும் சபை" என்பது, அப்பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் நிருவாகமும் முகாமையும் எந்தப் பணிப்பாளர்கள் சபைக்கு அல்லது வேறு குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதோ அந்தப் பணிப்பாளர்கள் சபை அல்லது வேறு குழு என்று பொருளாகும்.

## பாகம் IV

### *நிதி*

*அதிகார சபையின் நிதியம்.*

**20.** (1) அதிகாரசபை அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன நிதியத்தினுட் செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) அதிகாரசபையின் பாவனைக்காகப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபை அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதிகாரசபையினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்;

(இ) எத்தகையதுமான எம்மூலத்திலிருந்தேனும் கடன்கள், நன்கொடைகள், கொடைகள் மற்றும் மானியக் கொடைகள் என்றவகையாக அதிகாரசபையினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்;

(ஈ) அதிகாரசபைக்குச் சொந்தமான ஆதனத்தைப் பராதீனப்படுத்துவதன்மூலம், குத்தகைக்குக் கொடுப்பதன் மூலம் அல்லது வாடகைக்குவிடுவதன்மூலம் பெறப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபை அதன் தத்துவங்களையும் பணிகளையும் மற்றும் கடமைகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் மற்றும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*அதிகாரசபை கணக்குகளைப் பேணுதல்.*

**21.** அதிகாரசபை, அது தோதானதெனக் கருதக்கூடியவாறான ஏதேனும் வங்கியுடன் ஏதேனும் கணக்கைத் திறந்து பேணலாம் என்பதுடன், அத்தகைய கணக்கு, பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக அரசாங்கத்தின் நிலவுகின்ற நிதிசார் ஒழுங்குவிதிகளுக்கிணங்கத் தொழிற்படுத்தப்படுதலும் வேண்டும்.

*நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.*

**22.** (1) அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, அதிகாரசபையின் வருமானம், செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வேறெல்லா நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் என்பன தொடர்பில் முறையான கணக்குகள் பற்றிய புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் நிதிசார் செயல்நிறைவேற்றுகை மற்றும் நிதிசார் நிலைமை என்பனவற்றின் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தை முன்வைக்கும் நோக்கத்துக்காக, அதிகாரசபை, 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின்கீழ் இலங்கைப் பட்டயம்பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கக் கணக்குகளைத் தயாரித்தல் வேண்டும்.

(4) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், அதிகாரசபையின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தலுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

*நிதிகளை முதலீடு செய்தல்.*

**23.** அதிகாரசபைக்குச் சொந்தமான பணங்கள், அமைச்சரின் அங்கீகாரத்துடனும் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடனும், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பிணையங்களில் முதலீடுசெய்யப்படலாம்.

**24.** (1) அதிகாரசபை, அமைச்சரினதும் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினதும் எழுத்திலான சம்மதத்துடனும், கொடுக்கப்பட்ட ஏதேனும் பொதுவான அதிகாரத்தின் நியதிகளுக்கிணங்கவும், அதிகாரசபையின் கடப்பாடுகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு அதிகாரசபைக்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய பணத்தொகைகளைக் கடனெடுக்கலாம் அல்லது கடனாகப் பெறலாம்.

*அதிகாரசபையின் கடனெடுக்கும் தத்துவங்கள்.*

(2) இப்பிரிவின்கீழ் அதிகாரசபையினால் திரட்டப்பட்ட எவையேனும் கடன்கள் தொடர்பில் நிலுவையாகவுள்ள தொகையின் கூட்டுமொத்தம், அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையை எந்நேரத்திலும் விஞ்சுதலாகாது.

**25.** அதிகாரசபை, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நியதிகளில் அனுமதிக்கப்பட்டவாறான அத்தகைய அளவுவரை அதிகாரசபையின் வருமானம் அல்லது இலாபங்கள்மீதான ஏதேனும் வரியின் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

*தீர்வைகள் முதலியவற்றின் கொடுப்பனவுகளிலிருந்து அதிகாரசபைக்கு விலக்களித்தல்.*

## பாகம் V

## பொது

**26.** (1) அதிகாரசபை, ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்ததிலிருந்து ஆறுமாதங்களினுள், அந்நிதியாண்டின்போது அதிகாரசபையினால் கொண்டுநடாத்தப்பட்ட செயற்பாடுகள் பற்றிய வருடாந்த அறிக்கையொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாண்டு தொடர்பான பின்வரும் ஆவணங்களுள் ஒவ்வொன்றினதும் பிரதியொன்றை அறிக்கையுடன் இணைக்கச் செய்வித்தலும் வேண்டும்:-

*வருடாந்த அறிக்கை.*

(அ) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையுடன் சேர்த்து ஆண்டுக்காக அதிகாரசபையின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள்; அத்துடன்

(ஆ) அத்தகைய அறிக்கையும் கணக்குகளும் எந்த ஆண்டு தொடர்பானவையோ அந்த ஆண்டை உடனடுத்துவரும் ஆண்டுக்காக உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகளின் அறிக்கையொன்று.

(2) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையினதும் ஆவணங்களினதும் பிரதிகளை, அத்தகைய அறிக்கை கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து ஆறுமாதங்களினுள் பாராளுமன்றத்தின் முன்னர் இடுதல்வேண்டும்.

*இரகசியம் பற்றிய வெளிப் படுத்துகை.*

**27.** சபையின் ஒவ்வோர் உறுப்பினரும் மற்றும் அதிகாரசபையின் எல்லா அலுவலர்களும் மற்றும் வேறு ஊழியர்களும் அவரது கடமைகளை ஏற்குமுன்னர், இச்சட்டத்தின்கீழான அவரது தத்துவங்களையும் பணிகளையும் புரிகையில் அல்லது பிரயோகிக்கையில் அவரது அறிவுக்கு வந்துள்ளவையும் அதிகாரசபையின் அலுவல்களுடன் சம்பந்தப்பட்டவையுமான எல்லாக் கருமங்களும் தொடர்பில் கண்டிப்பாக இரகசியம் பேணுவதற்கு வாக்குறுதியளித்து வெளிப் படுத்துகையொன்றில் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் கருமத்தைப் பின்வரும் சந்தர்ப்பங்களிற்றவிர வெளிவிடாதிருப் பாரென அத்தகைய வெளிப்படுத்துகைமூலம் வாக்குறுதியளித் தலும் வேண்டும்:-

(அ) அவ்வாறு செய்யும்படி ஒரு சட்ட நீதிமன்றத்தினால் தேவைப்படுத்தப்படும்போது; அல்லது

(ஆ) அவ்வாறு செய்யும்படி ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்படும்போது.

*அதிகார சபையின் தத்துவங்களைக் கையளித்தல்.*

**28.** (1) சபையானது எழுத்திலும் அதன்கண் குறித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமையவும், அதிகாரசபையின் தத்துவங்களுள் அல்லது பணிகளுள் எவற்றையும் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலா மென்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது

அத்தகைய அலுவலர், அதிகாரசபையின் பெயரிலும் அதன் சார்பிலும் அத்தகைய தத்துவத்தை அல்லது பணியைப் பிரயோகித்தல் வேண்டும் அல்லது புரிதல் வேண்டும்.

(2) சபையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், அவ்வாறு கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது பணியைத் தாமே பிரயோகிக்கலாம் அல்லது புரியலாம் என்பதுடன், அத்தகைய ஏதேனும் கையளிப்பை எந்நேரத்திலும் இல்லாதொழிக்கலாம்.

அமைச்சரினாலான பணிப்புகள்.

**29.** (1) அமைச்சரானவர், அதிகாரசபையின் குறிக்கோள்கள் தொடர்பான அரசாங்கக் கொள்கைக்குத் தகுந்த பயன்கொடுப்பதனை உறுதிப்படுத்தும்வகையில் அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் பற்றி எழுத்திலான அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளை அதிகாரசபைக்குக் காலத்துக்குக்காலம் வழங்கலாம் என்பதுடன், அத்தகைய பணிப்புகளுக்குப் பயன்கொடுப்பது அதிகாரசபையின் கடமையாதலும் வேண்டும்.

(2) அமைச்சர், அதிகாரசபையின் பணி தொடர்பாக அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய படிவத்திலான விபரத்திரட்டுக்களையும், கணக்குகளையும், வேறெவையேனும் தகவல்களையும் தமக்குக் கொடுத்துதவும்படி அதிகாரசபையைப் பணிக்கலாமென்பதுடன், அத்தகைய பணிப்புகளுக்குப் பயன்கொடுப்பது அதிகாரசபையின் கடமையாதலும் வேண்டும்.

அதிகாரசபையின் அலுவலர்களும் மற்றும் வேறு ஊழியர்களும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல்.

**30.** அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியும் அலுவலர்களும் மற்றும் வேறு ஊழியர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*அதிகாரசபையானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல்.*

**31.** அதிகாரசபையானது (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

*காணியின் கட்டாயக் கொள்ளுதல்.*

**32.** (1) ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட இடப்பரப்பினுள் அதிகாரசபையினால் அதன் நோக்கங்களுள் எவற்றுக்காகவும் ஏதேனும் தனியார் காணி அல்லது ஏதேனும் தனியார் காணியிலான ஏதேனும் அக்கறை தேவைப்படுமிடத்தும், அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய நோக்கத்துக்காக அத்தகைய காணியின் கொள்ளுதலை அங்கீகரிக்குமிடத்தும், அத்தகைய காணி அல்லது அத்தகைய காணியிலான ஏதேனும் அக்கறை ஒரு பகிரங்க நோக்கத்துக்காகத் தேவைப்படுகின்றதெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், (460 ஆம் அத்தியாயமான) 1950 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, காணி கொள்ளுதல் சட்டத்தின் கீழ் அதற்கிணங்கக் கொள்ளப்பட்டு அதிகாரசபைக்குக் கைமாற்றவும் படலாம்.

(2) அதிகாரசபைக்காக (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் காணியை அல்லது அத்தகைய காணியிலான ஏதேனும் அக்கறையைக் கொள்ளுவதற்காக நட்டஈடாகச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை அதிகாரசபையினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

*துடர்ச்சியிலான அல்லது குற்ற வழக்கிலான செலவுகள் நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல்.*

**33.** (1) அதிகாரசபையினால் அல்லது அதற்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதனால் உறப்பட்ட எவையேனும் செலவுகள் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள் அதிகாரசபையின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(2) சபையின் எவரேனும் உறுப்பினரினால், அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது எவரேனும் அலுவலரினால் அல்லது ஊழியரினால் இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின்மேல் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் அத்தகைய ஆளுக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது நியாயசபையின்முன்னர் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய ஆளினால் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அறவிடப்படற்பாலனவாக இருந்தாலொழிய, அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்.

**34.** (1) அமைச்சர், விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அந்த ஒழுங்கு விதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) (அ) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்கு விதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

(ஆ) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி, அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று ஒழிக்கப்பட்டுவிட்டதாக அவ்வாறு கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

விதிகளை ஆக்குவதற்குச் சபைக்குள்ள தத்துவம்.

**35.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பின்வரும் கருமங்களுள் எல்லாம் தொடர்பிலும் அல்லது எவை தொடர்பிலும் சபையானது விதிகளை ஆக்கலாம்:–

(அ) அதிகாரசபையின் கூட்டங்களும் அத்தகைய கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையும்; அத்துடன்

(ஆ) அதிகாரசபையின் அலுவல்களினது முகாமையுடன் சம்பந்தப்பட்ட வேறேதேனும் கருமம்.

(2) சபையினால் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

தவறுகளும் தண்டங்களும்.

**36.** (1) (அ) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் எவரேனுமாள் தமது தத்துவங்களைப் பிரயோகிப்பதில் செயலாற்றுகின்றபோது ஏதேனும் நியாயப்படுத்தத்தக்க அல்லது சட்டமுறையான அடிப்படையின்றி அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்றவரான;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் செயலாற்றுகின்ற ஆளொருவராக இருந்து, இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தத்துவத்தை அல்லது பணியைப் பிரயோகிக்கையில் அல்லது நிறைவேற்றுகையில், அலைக்கழிக்கும் அல்லது கோபமூட்டும் முறையில் நடக்கின்றவரான அல்லது தம்மை நடாத்திக்கொள்கின்றவரான;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றையும் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறுகின்றவரான அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அவருக்கு விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவரான;

(ஈ) இச்சட்டத்தின்கீழ் அவர்மீது விதிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுக ஏதேனும் விபரத்திரட்டை அல்லது எவையேனும் தகவல்களைக் கொடுத்துதவத் தவறுகின்றவரான அல்லது அவரினாற் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டில் அல்லது தகவல்களில் ஏதேனும் பொய்யான கூற்றை அளிக்கின்றவரான,

ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றவராதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் (1) ஆம் உட்பிரிவின்கீழான தவறொன்றைப் புரிகின்றவரான ஆள் ஒவ்வொருவரும் நீதிவான் முன்னரான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது ஒருமாதத்தை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

**37**. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக- பொருள் கோடல்.

"அபிவிருத்திக் கருத்திட்டம்" என்பது, பெயர்குறிக்கப்பட்ட இடப்பரப்புக்களில் உற்பத்தியை, வருமானத்தை தொழிலைத் தோற்றுவிக்கின்ற அல்லது பொருளாதார, சமூக அல்லது சூழல்சார் நிலைமைகளைச் சீராக்குகின்ற ஏதேனும் பகிரங்க அல்லது தனியார் செயற்பாடு என்று பொருளாகும்;

“பேரழிவுச் செயலாட்சி நிலையம்” என்பது, 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கைப் பேரழிவுச் செயலாட்சிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பேரழிவுச் செயலாட்சி நிலையம் என்று பொருளாகும்;

“தோட்டங்கள்” என்பது, 10க்கு மேற்பட்ட வதிவுள்ள தொழிலாளிகளுடன் 20க்கு மேற்பட்ட ஏக்கர்களில் தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் நெய்யப் பனை பயிரிடப்படுகின்ற இடப்பரப்புக்கள் என்று பொருளாகும்;

“அமுலாக்குகின்ற முகவராண்மைகள்” என்பது, தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரிவு மட்டங்களில் அரசாங்கத்தின் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குகின்ற பணி குறித்தளிக்கப்படுகின்ற அரசாங்க அமைச்சுக்களும் திணைக்களங்களும் என்று பொருளாகும்;

“அமைச்சர்” என்பது, மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்;

“தேசியக்கட்டிட ஆராய்ச்சி ஒழுங்கமைப்பு” என்பது, பேரழிவு முகாமை என்னும் விடயம் குறித்தளிக் கப்பட்ட அமைச்சரின் அமைச்சின்கீழ் பணியாற்று கின்ற தேசியக் கட்டிட ஆராய்ச்சி ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

“புதிய கிராமங்கள்” என்பது, தோட்டங்களில் ஏலவேயுள்ள லயன் அறை வீடமைப்பைத் தனிவீடு களுடனும் அத்தோட்டங்களினுள் சீராக்கப்பட்ட அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளுடனும் மாற்றீடுசெய்வதன் மூலம் தாபிக்கப்படுகின்ற கிராமங்கள் என்று பொருளாகும்;

"பெருந்தோட்டச் சமுதாயத்தினர்" என்பது, தோட்டங்களில் வாழ்கின்ற வேலையாளர்களையும் வேலையாளர்கள் அல்லாதோரையும் கொண்டுள்ள சட்டப்படியான வதிவோர் என்று பொருளாகும்;

"பெருந்தோட்டக் கம்பெனிகள்" என்பது, கொடுக்கப்பட்டவொரு காலப்பகுதிக்காக அடையாளம் காணப்பட்ட தேயிலை, இறப்பர் மற்றும் தென்னந்தோட்டங்களை முகாமைசெய்வதற்காக, 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழிற் பொறுப்புமுயற்சிகளைப் பகிரங்கக் கம்பனிகளாக மாற்றுதல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளின் படி, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தினால் நீக்கப்பட்டு மாற்றீடுசெய்யப்பட்ட 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 15 (1) ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட கூட்டிணைத்தற் சான்றிதழ் ஒன்றின்மூலம் கூட்டிணைக்கப்பட்டவையும், அவை தொடர்பில், விடயத்துக்கேற்ப, மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையுடன் (மதோஅச) அல்லது 1958 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்துடன் நீண்டகாலக் குத்தகை உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டுள்ளவையுமான பெருந்தோட்டக் கம்பெனிகள் என்று பொருளாகும்;

"பெருந்தோட்டப் பிராந்தியம்" என்பது, தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் நெய்யப்பனை எந்தத் தோட்டங்களில் பயிரிடப்படுகின்றனவோ அந்தத் தோட்டங்களில் வதிவுள்ள தொழிலாளிகள் வாழ்கின்றவையும், மத்திய, ஊவா, சப்ரகமுவ, தெற்கு, மேற்கு, வடமத்தி மற்றும் வடமேற்கு

மாகாணங்களிலுள்ள மாவட்டங்களில் பிரதேச செயலாளர் பிரிவுகளின்கீழ் அடங்குகின்றவையுமான இடப்பரப்புக்கள் என்று பொருளாகும்;

''தோதான அமைச்சர்கள்'' என்பது,பெருந்தோட்ட காணிகளின் பயன்பாட்டை மேற்பார்வை செய்ய சட்டரீதியாக ஆணையிடப்பட்டுள்ள நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர், பெருந்தோட்டக் கைத்தொழில் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர், பகிரங்க தொழில்முயற்சி அபிவிருத்தி எனும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சர் மற்றும் காணிகள் எனும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சர் என்று பொருளாகும்.

**38.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*